(6)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432ம் பசலி ½ கிலோ (500கிராம்) லேமினேட்டட் கம்போசிட் காலி டப்பா சப்ளைக்கான - ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432-க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| 1 | ½ கிலோ (500கிராம்) FOOD GRADE லேமினேட்டட் கம்போசிட் காலி டப்பா சப்ளை செய்ய டப்பா ஒன்றுக்கு விலை | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.
2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை **(PAN CARD)& GST** சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

## அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

**1432-ம் பசலிக்கு பஞ்சாமிர்தம் டப்பாக்களில் அடைக்க ½கிலோ கொள்ளளவு (500கிராம்) லேமினேட்டட் கம்போசிட் காலிடப்பா மெட்டல் மூடியுடன் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய 1432-ம் பசலிக்கு இத்திருக்கோயிலில் தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம் அடைக்கத் தேவைப்படும் 47கிராம் எடையுள்ள ½கிலோ (500கிராம்) கொள்ளளவு கொண்ட லேமினேடட் கம்போசிட் அலுமினிய டப்பா மெட்டல் மூடியுடன் 301x110mm 73.5mm I.D x 110mm HT, உணவு பொருள் பயன்படுத்தக்கூடிய (Food Grade) தரத்துடன் இருக்க வேண்டும். டப்பாவை சுற்றி வெளிப்புறம் திருக்கோயில் விளம்பரம் நான்கு வண்ண கலரில் இருக்க வேண்டும். டப்பாவின் உள் புறம் அலுமினிய foil liner heat sealed செய்யப்பட்டு இருக்க வேண்டும். மேற்படி டப்பா சப்ளை செய்வதற்கு ISO தரச்சான்று பெற்ற நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022-ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022-ம் தேதி பிற்பகல் 03.00 மணிஅளவில்** டெண்டர்தாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் விற்பனை வரி, வருமான வரி GST மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் உட்பட

**சப்ளை செய்யப்பட வேண்டிய இனத்தின் விவரம்**

47கிராம் எடையுள்ள ½கிலோ (500கிராம்) கொள்ளளவு கொண்ட FOOD GRADE லேமினேடட் கம்போசிட் டப்பா மெட்டல் மூடியுடன் 301x110mm 73.5mm I.D x 110mm HT, உணவு பொருள் பயன்படுத்தக்கூடிய (Food Grade) தரத்துடன் இருக்க வேண்டும்.

திருக்கோயில் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட பொருள் விபரம், எடை விபரம், விலை விபரம், FSSAI உரிம விபரம் மற்றும் Best Before 15 days from the date of manufacturing "Please refer bottom" என்ற விபரம் ஆகியவை அடங்கிய லேமினேடெட் லேபிள் டப்பாவை சுற்றி வெளிப்புறம் ஒட்டி சப்ளை செய்ய வேண்டும்.

டப்பாவின் உள் புறம் அலுமினிய foil liner heat sealed செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

½கிலோ (500கிராம்) கொள்ளளவு கொண்ட FOOD GRADE லேமினேடட் கம்போசிட் டப்பா மெட்டல் மூடியுடன் - ஒன்றுக்கு விலை விவரம் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிடும் விலையானது அரசால் நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி , வருமான வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையை எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**லேபிள் பிரிண்டிங் விவரம்**

டப்பாவின் வெளிபுறம் உள்ள லேபிளில் கீழ்கண்ட விபரங்கள் தமிழ் ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளில் பிரிண்ட் செய்யப்பட்டும் பழநியாண்டவர் படம், ரோப்கார், வின்ச் படம் ஆகிய விபரங்கள் திருக்கோயிலின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். திருக்கோயில் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்ட

FSSAI Lic.No.
10017042003492(Central)
Abishega Panchamirtham
Ingredients
Banana
Jaggery
Seedless Dates
Diamond Sugar Candy
Ghee
Honey
Cardamom

**Nutritional Information Per 100gram Product (Approx)**

| | | |
|---|---|---|
| Fat | : | 1.07% |
| Protein | : | 2.60% |
| Carbohydrate | : | 74.8% |
| Energy (K.cals) | : | 319.0 |

**Manufacturer:** Arulmigu Dhandayuthapani Swamy Thirukkoil, West Giriveethi, Adivaram, Palani.

Net Weight: 455 Grams
Batch No.
DOM:
Best before 15 days from DOM

பொருள் விபரம், எடை விபரம், FSSAI உரிம விபரம் மற்றும் "Best Before 15 days from the date of manufacturing Please refer bottom" என்ற விபரம் ஆகியவை அடங்கிய லேமினேடெட் லேபிள் டப்பாவை சுற்றி வெளிப்புறம் ஒட்டி சப்ளை செய்ய வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக **ரூ.20,00,000/-** (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2 01.05.2022-ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான **ரூ.20,00,000/-**க்கான (ரூபாய் இருபது லட்சம்) அசல் சால்வன்சி சான்றிதழ் இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையாகவும் செலுத்தலாம்.

3 ஒப்பந்தப்புள்ளிதாரர் நிறுவனம் ISO தரச்சான்று பெற்றுள்ளதற்கான சான்றின் நகல் ஒன்றினை இணைக்க வேண்டும்.

4 ஒப்பந்தப்புள்ளியில் பங்குபெறும் நிறுவனம் தனது உற்பத்தி தொழிற்சாலையில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட இனமான 1/2 கிலோ FOOD GRADE லேமினேடெட் கம்போசிட்டப்பா நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் எண்ணிக்கையில் தானியங்கி இயந்திரம் மூலம் உற்பத்தி செய்வதற்கான திறன் பெற்றுள்ளது என்பதற்கான சான்றினை தகுதியான அரசு அலுவலரிடமிருந்து பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மேற்காணும் உற்பத்தி திறன் குறித்து தொழிற்சாலையில் ஆய்வு செய்து பார்வையிட திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு.

5 ஒப்பந்தப்புள்ளிதாரர் தான் சப்ளை செய்யவுள்ள மேற்காணும் அளவுகளில் குறிக்கப்பட்ட FOOD GRADE லேமினேட்டட் கம்போசிட் டப்பாக்கள் உணவுத்தரமாக (FOOD GRADE) உள்ள என்பதற்கான மத்திய அரசு அல்லது மாநில அரசு தரபரிசோதனை நிலைய சான்று நகலினை ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்க வேண்டும். மேற்காணும் உணவுத்தரச்சான்று (FOOD GRADE) இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

6 ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் அட்டையின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் (PAN CARD)& GST நகல் கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7 ஒப்பந்ததாரர் பெயரில் லேமினேடெட் டின் தயார் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லத்தக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு (TIN நம்பருடன்) செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.

8 ஒப்பந்ததாரர் நிறுவனம் தனியார் (Proprietorship) அல்லது பங்குதாரர் நிறுவனம் (Partnership Firm) அல்லது தனியார் / பொது நிறுவனம் (Private/Public Limited) என எவ்வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த பதிவு சான்றின் நகல் ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

9 ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் மேற்படி டப்பா தயாரிப்பில் குறைந்தது 3 ஆண்டுகளாவது ஈடுபட்டுள்ளவர்களாக இருப்பதற்கான ஆதாரம் இணைக்க வேண்டும். 01.04.2019ம் ஆண்டு முதல் 31.03.2022ஆண்டு முடிய உள்ள 3 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு வருடமும் வருடம் ஒன்றுக்கு மேற்படி வியாபாரத்தில் ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம்) குறையாமல் வியாபாரம் செய்து வருமான வரித்துறையில் தாக்கல் செய்த **Balance Sheet** பட்டய கணக்கரால் **(Chartered Accountant)** மேலொப்பம் **(Attested)** செய்யப்பட்ட நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்கப்பட வேண்டும். மேலும் வருமான வரி செலுத்தியதற்கு **(Income Tax)** சான்றின் நகல் ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

/4/

10 ஒப்பந்தப்புள்ளிதாரரின் தொழிற்சாலையின் பெயர், இடம் மற்றும் நிறுவனத்தில் நிறுவியுள்ள இயந்திரம் பற்றிய புள்ளி விவரங்களை குறிப்பிட வேண்டும்.

11 மின்தடை ஏற்படும் காலங்களில் ஜெனரேட்டர் மூலம் டப்பாக்களை தயாரித்து தடையின்றி சப்ளை செய்ய திறன் உள்ளதற்கு ஜெனரேட்டர் நிறுவிய சான்றிதழ் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

12 திருக்கோயில் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட பொருள் விபரம், எடை விபரம், விலை விபரம், FSSAI உரிம விபரம் ஆகியவை அடங்கிய லேமினேடெட் லேபிள் டப்பாவை சுற்றி வெளிப்புறம் ஒட்டி சப்ளை செய்ய வேண்டும்.

13 ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி டப்பாக்களை ஏற்கனவே FSSAI உரிமம் பெற்ற உணவுப்பொருட்கள் தயார் செய்யும் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்ததற்கான ஆதாரம் இணைக்க வேண்டும்.

14 தொழிற்சாலை இயங்கும் தன்மை குறித்த தகுதிவாய்ந்த அலுவலரின் சான்றிதழ் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

15 ஒப்பந்ததாரர் 21 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். இதற்கான சான்றாக கல்விச்சான்று, பிறப்பு சான்று, ஆகிய ஆவணங்களில் ஏதாவது ஒன்றின் நகலினை சான்றாக முதல் உறையில் இணைக்க வேண்டும்.

16 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 15 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

17 ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

18 பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு ஒப்பந்தப்புள்ளியில் இணைத்திருந்த மாதிரிபடியான தரமான ½கிலோ கொள்ளளவு கொண்ட லேமினேடட் கம்போசிட் டப்பா மெட்டல் மூடியுடன் தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும்.

19 பஞ்சாமிர்தப்பிரிவிற்கு ஒப்பந்தப்புள்ளிதாரரால் கொண்டு செல்லப்படும் ½கிலோ காலி லேமினேட்டட் கம்போசிட் டப்பாக்கள் பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளரால் நன்றாக பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக பிரிவுப் பொறுப்பாளர் ஏற்றுக்கொண்டால் உடன் அவர்கள் முன்னிலையில் எண்ணிக்காண்பித்து வழங்கப்பட வேண்டும். வரப்பெற்ற டப்பாக்களில் பஞ்சாமிர்தம் அடைத்து விற்பனை செய்ய தகுதியற்றவை என்று பஞ்சாமிர்தம் அடைக்கும் பொழுது கண்டறியப்படும் டப்பாக்களின் எண்ணிக்கைக்கு சமமான தரமான காலி டப்பாக்களை தொகை ஏதும் கோராமல் ஒப்பந்தப்புள்ளிதாரர் வழங்க வேண்டும். தவறினால் தகுதியற்ற டப்பாக்களின் தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

/5/

20 ஒப்பந்தப்புள்ளிதாரா் ஐயப்ப பக்தா்கள் வருகை காலமான "ஐப்பசி, காா்த்திகை, மாா்கழி, தை மாதங்கள்", "தைப்பூசம்", "பங்குனி உத்திரம்" போன்ற திருவிழா காலங்கள், கோடை விடுமுறை மற்றும் விசேட காலங்களில் பஞ்சாமிா்தப்பிரிவு பொறுப்பாளா் வழங்கும் கொள்முதல் கேட்பு சீட்டு அளவின்படி தவறாது தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிா்வாகம் மூலம் வெளிமாா்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாராிடம் வசூல் செய்யப்படும். மாற்று ஏற்பாடு செய்து கொள்ள திருக்கோயில் நிா்வாகத்தை கோர ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு உாிமை இல்லை.

21 சப்ளை செய்யப்படும் லேமினேடெட் காம்போசிட் டப்பாகள் இயந்திரம் மூலம் பஞ்சாமிா்தம் நிரப்புவதற்கு ஏதுவாக நன்கு உலா்ந்து இருக்க வேண்டும். டப்பாவில் மூடி சாியாக பொருந்தும் படி தயாா் செய்து சப்ளை செய்ய வேண்டும்.

22 டப்பாக்களை அட்டைப்பெட்டியில் அடுக்கி பேக்கிங் செய்யும் போது டப்பா திறந்த நிலையில் அடுக்காமல் மேல் பகுதியில் Food Grade காகிதத்தால் மூடி பேக்கிங் செய்து அனுப்ப வேண்டும்.

23 இயந்திரத்தினால் பஞ்சாமிா்தம் நிரப்பும்பொழுது அல்லது அதை தொழிலாளா்கள் கையாளும் பொழுது உடைந்தாலோ, சேதமுற்றாலோ அதற்கு பதிலாக அதே எண்ணிக்கையிலான டப்பாக்களை ஒப்பந்தப்புள்ளிதாரா் மாற்றிக் கொடுக்க வேண்டும்.

24 ஒப்பந்தப்புள்ளிதாரரால் டப்பா சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இடையூறு ஏற்பட்டால் அதற்கு திருக்கோயில் நிா்வாகம் ஏதும் பொறுப்பேற்காது.

25 சப்ளை செய்யப்படும் மேற்படி ½கிலோ லேமினேடட் கம்போசிட் டப்பாக்களுக்கு ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் தொகை மற்றும் வருமான வாித்தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும்.

26 ஒப்பந்ததாரா் பட்டியலில் பிடித்தம் செய்த 10% பிடித்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா என பாிசீலனை செய்து, இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப்பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை முழுவதும் வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

27 ஒப்பந்ததாரா் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமான வாி தொகைக்கு உாிய Form-16 திருக்கோயிலிலிருந்து வழங்கப்படும்.

28 திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவா்களோ, திருக்கோயிலுக்கு எவ்வகையிலேனும் பாக்கி செலுத்த வேண்டியிருப்பவா்களோ, திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவா்களோ, திருக்கோயில் பணியாளா்களோ அல்லது பணியாளா்களுடன் இரத்த சம்பந்தப்பட்ட நெருங்கிய உறவினா்களோ திருக்கோயில் நிா்வாகத்தில் எவ்வகையிலேனும் ஒப்பந்த முறையில் பணிபுாிபவா்களோ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளக் கூடாது.

29 திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக ஒப்பந்தத்தை துய்க்க கூடாது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நன்கு அறிந்து ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாகவே கருதப்படும்.

30 ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

31 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட மேற்படி ½கிலோ லேமினேடட் கம்போசிட் டப்பாக்களுக்கு பட்டியல் வழங்குவதில் நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமதத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தடையின்றி வழங்க வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும் பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து ½கிலோ லேமினேடட் கம்போசிட் டப்பாக்களுக்கு சப்ளை செய்ய வேண்டும்.

32 ஒப்பந்தப்புள்ளிதாரர் சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது.

33 ஒப்பந்தப்புள்ளிதாரர் இத்திருக்கோயில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும், நடைமுறை விதிகளுக்கும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்ட திட்டங்களுக்குட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.

34 ஒப்பந்தப்புள்ளிதாரர் தேவைக்கேற்ப மேற்படி ½கிலோ லேமினேடட் கம்போசிட் டப்பாக்களுக்கு சப்ளை செய்யாவிட்டாலோ தேவைப்பட்டியல்படி வழங்காமல் குறைவாக வழங்கினாலோ அல்லது திருக்கோயில் சட்டதிட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகள் மற்றும் சென்னை, இந்து சமய அறநிலையத்துறை சட்டதிட்டங்களுக்கு மாறாக செயல்பட்டாலோ ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும்.

35 ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு திருக்கோயிலுக்குத் தேவையான மேற்படி ½கிலோ லேமினேடட் கம்போசிட் டப்பாக்களுக்கு வெளிச்சந்தையிலோ, விலைப்புள்ளி மூலமோ அல்லது மறுடெண்டர் மூலமோ கொள்முதல் செய்யப்படும். அதனால், திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இழப்புத்தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். தவறினால் சட்டவிதிகளின்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து வட்டியுடன் வசூலிக்கப்படும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை ஈடுசெய்யப்படும். தவறினால், நீதிமன்றம் மூலம் நீதிமன்ற செலவுடன் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

36 எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

37 இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களுக்கு வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

38 ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை, ஆணையா் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

39 1432-ம் பசலித் தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று ½கிலோ லேமினேடட் கம்போசிட் டப்பாக்களுக்கு சப்ளை செய்த வகையில் தணிக்கைத்தடை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின், அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

40 மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பின்பற்ற தவறினாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

41 ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் சப்ளை செய்யப்படும் காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், ஒப்பந்தப்புள்ளி விலைக்கே ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்தப்புள்ளிதாரா் சப்ளை செய்ய வேண்டும்.

42 மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவா்களோ, இந்துக்கள் அல்லாதவா்களோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டாா்கள்.

43 ஒப்பந்தப்புள்ளி தேதி, நேரம் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையா் / செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கிடையாது.

44 திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுவபவா்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவா்கள், ஒப்பந்தப்புள்ளிகளை பசலி காலம் முடிய பூா்த்தி செய்யாதவா்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டாா்கள்.

45 டெண்டா் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலா் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

46 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலா் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலா் அவா்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

47 ஒப்பந்ததாரரால் சப்பளை செய்யப்பட்ட பொருட்களில் சேதாரம் அடைந்திருப்பின் அதனை ஒப்பந்ததாரரே சரி செய்து தர வேண்டும். இல்லையேல் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 10 % அல்லது வைப்புத் தொகையில் ஈடு செய்யப்படும்.

48 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலா்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளா்